(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)
மாணவ-மாணவியருக்கு மட்டும்)

**SUBJECT CODE** **21 PTM 414**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2023**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெணகள் : 70**

**நான்காம் பருவம்** **நேரம் : 3 மணி**

## தொன்மை இலக்கியம்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)**

1. “வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு” என்ற தொடர் இடம்பெறும் நூல் எது?
(அ) பரிபாடல் (ஆ) நெடுநல்வாடை (இ) பெரும்பாணாற்றுப்படை (ஈ) கலித்தொகை
2. ‘வள்உகிர் ’ என்பதன் பொருள் யாது?
(அ) காளான் (ஆ) வயல் (இ) மூங்கில் கோல் (ஈ) கூரிய நகம்
3. அகநானூற்றில் ஒன்று முதல் நூற்றிருபது வரையிலான பாடல்கள்.......... என்று அறியப்படும்.
(அ) மணிமிடை பவளம் (ஆ) பவளக்கோவை
(இ) களிற்றியானை நிரை (ஈ) நித்திலக்கோவை
4. “புண்உமிழ்குருதி” என்னும் பெயர் பெற்ற பாடல் இடம்பெறும் நூலினைக் குறிப்பிடுக.
(அ) பதிற்றுப்பத்து (ஆ) நற்றிணை (இ) கலித்தொகை (ஈ) பரிபாடல்
5. “அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ” என்று வியந்தவர் யார்?
(அ) தோழி (ஆ) நற்றாய் (இ) தலைவன் (ஈ) கண்டோர்

**ஓரிரு சொற்களில் அல்லது தொடர்களில் விடையளிக்க.** (K2)

6. தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பத்துப் பாட்டு நூல் எது?
7. ஒன்பதடிச் சிறுமையும், பன்னிரண்டடிப் பெருமையுமுடைய எட்டுத்தொகை நூல் எது?
8. பா வகையால் பெயர் பெற்ற இரண்டு சங்க நூற்களின் பெயர் தருக.
9. பறம்பு நாட்டின் அழிவு கண்டு வருந்திய சங்ககாலப் புலவர் யார்?
10. ”காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்” என்னும் தொடரால் அறியவரும் கருத்து யாது?

**பகுதி – ஆ** (மதிப்பெண்கள் : 5X4= 20 )

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் இரண்டு பக்க அளவில் விடையளிக்க.**

11. (அ) இளந்திரையனின் நல்லியல்புகளைப் புலப்படுத்துக.

அல்லது

(ஆ) நெடுநல்வாடை காட்டும் தலைவியின் துன்பநிலையினை சுட்டுக.

ETHICAL PAPER

(த.பி.பா.)

12. (அ) உமது பாடப்பகுதியில் இடம்பெறும் குறுந்தொகைப் பாடல்கள் காட்டும் குறிஞ்சித் திணைச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) ஐங்குறுநூற்றுப் பாடல்கள் வழி அறியலாகும் இலக்கிய நயங்கள் குறித்து விளக்குக.

13. (அ) செவ்வேளின் சிறப்புகளை உமது பாடப்பகுதியின் துணை கொண்டு எடுத்துரைக்க.

அல்லது

(ஆ) கலித்தொகைப் பாடல்கள் எடுத்துரைக்கும் பாலைத் திணைச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

14. (அ) "மறம் வீங்கு பல் புகழ்" என்னும் பாடல் வாயிலாக அறிய வரும் கருத்துகளை எடுத்தெழுதுக.

அல்லது

(ஆ) கபிலரின் உணர்வுகளை அவர்தம் பாடல்கள் வழி நின்று விளக்குக.

15. (அ) முதுமொழிக்காஞ்சி கூறிச்செல்லும் கருத்துகளை நும் பாடப்பகுதியின் மூலமாக விவரிக்க.

அல்லது

(ஆ) அகவாழ்வு குறித்து வள்ளுவர் கூறுவன யாவை? பாடப்பகுதி வழிநின்று விளக்கி எழுதுக.

## பகுதி –இ

**எவையேனும் நான்கு வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.**

(16 **வது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்கவும்)**

(**மதிப்பெண்**: 4X10= 40)

16. பெரும்பாணாற்றுப்படை காட்டும் பழந்தமிழர் வாழ்வியலை ஆய்ந்துரைக்க.

17. உமது பாடப்பகுதியில் இடம்பெறும் நற்றிணைப் பாடல்கள் காட்டும் அகவாழ்வினைப் பதிவு செய்க.

18. அகநானூற்றில் இடம்பெறும் தலைவன் தலைவியரின் காதல் வாழ்வினை ஆராய்ந்தெழுதுக.

19. பாரியின் சிறப்புகளை கபிலரின் பாடல்கள் வழிநின்று விவரிக்க.

20. வள்ளுவர் கூறும் அறக்கருத்துகளைக் கட்டுரை வடிவில் தருக.

21. கூதிர் கால நிகழ்வுகள் நெடுநல்வாடையில் எங்ஙனம் பதிவாகியுள்ளன? கட்டுரைக்க.

***